# தொழுகை அமர்வில் விரலசைத்தல் பற்றிய விமர்சனம்

தொழுகையின் அமர்வில் விரலசைத்தல் (ஆய்வு, அப்பாஸ் அலி *MISC*, தொகுப்பு : *M.G.* ஃபாரூக்) என்ற 7 பக்க ஆக்கத்தில் அந்நஜாத் ஜூன் 2012 இதழில் வெளியான கலாநிதி யு.எல்.ஏ. அஷ்ரப் *Ph.D., Al-Azhar* எழுதி இருந்த "விரலைச் சுட்டிக் காட்டுவதே நபி வழி! ஆட்டுவது நபிவழி அல்ல" என்ற ஆக்கத்திற்கு மறுப்புத் தெரிவித்து எழுதி இருந்தார்கள். அதற்குரிய பதிலே இது!

1986 ஏப்ரலில் அந்நஜாத் ஆரம்பித்ததிலிருந்து தொழுகை இருப்பில் விரும்புகிறவர்கள் ஆள் காட்டி விரலைக் கொண்டு இஷாரா-சமிக்கை அடிப்படையில் கிபுலாவை சுட்டிக் காட்டவும் செய்யலாம் (நஸாயீ 1148), யுஹர்ரிக்குஹா யது வூபிஹா-அசைத் தவர்களாக அது கொண்டு துஆ செய்தார்கள் என்ற அடிப்படையில் அசைக்கவும் செய்யலாம். 5வது மத்ஹப் ததஜ இமாம்(?) சொல்வது போல் அசைத்தல், இஷாரா என்ற சமிக்கைக்கு மேல் விளக்கமாக இருக்கிறது என்ற அவரது சுய விளக்கம் தவறு என்று அப்போதே விளக்கி இருந்தோம். அவர் சமுதாயத்தைப் பிளவுபடுத்தித் தனிப் போட்டிப் பள்ளிக் கட்டும் நோக்கத்துடன் நீட்டிச் சுட்டிக் காட்டுவது தவறு; ஆட்டியே தீரனும் என்று அடம் பிடித்தார். இன்று வரை அடம் பிடிக்கிறார். அவர் ததஜ மத்ஹபை விட்டு தௌபா செய்யாத வரை அவரது அடம் ஓயாது!

இந்த நிலையில் சு.ஜ. அரபி மதரஸா ஒன்றிலிருந்து விரலாட்டுவது சம்பந்தப்பட்ட அனைத்து ஹதீஃத்களையும் அனைத்து கிதாபுகளிலிருந்தும் வரிசையாக எடுத்து எழுதி அந்த ஹதீஃத்கள் அனைத்திலும் ஆஸிம் பின் குலைப் என்பவரே இடம் பெறுகிறார். அவர் இடம் பெறாத விரலாட்டும் ஹதீஃத் ஒன்று கூட இல்லை என்பதையும் நிலைநாட்டி, மேற்படி ஆஸிம் பின்குலைப் தனித்து அறிவித்தால் அதை ஆதாரமாகக் கொள்ளக் கூடாது என்று பிரபல ஹதீஃத்கலா வல்லுநர் இப்னுல் முதைனீ மறுப்புத் தெரிவித்துள்ளதையும் எடுத்து எழுதியிருந்தனர். மேலும் தொழுகையில் நான்கு இடங்களில் கைகளை உயர்த்துவது பற்றி (ரஃபயல்யதைன்) பல நபி தோழர்கள் அறிவிக்கும் ஆதாரபூர்வமான ஹதீஃதுக்கு முரணாக "கைகளை உயர்த்துவது இல்லை" என்று காணப்படும் ஹதீஃதிலும் இதே ஆஸிம்பின் குலைபே இடம் பெறுகிறார் என்றும் எழுதி இருந்தனர்.

நாமோ யார் சொன்னாலும், ஷைத்தான் சொன்னாலும் அதில் உண்மை இருந்தால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஷைத்தானோ, வழி கேடர்களோ சொல்வது உண்மையாக இருந்தாலும் அதை ஏற்கக் கூடாது என்று சிலர் கூறுவது பெரும் தவறு, வழிகேடு என்பதில் தெளிவாகவும் உறுதியாகவும் இருக்கிறோம். இதற்கு எமக்கு ஆதாரம் 39:17,18 இறைவாக்குகளாகும்.

இந்த அடிப்படையில் சு.ஜ. மதரஸாவிலிருந்து வந்த, அந்த விமர்சனத்தைத் தீரப் பரிசீலனை செய்து பார்த்ததில், அவர்கள் எழுதி இருந்தது போல், ஆசிம்பின் குலைப் இடம் பெறாத விர லாட்டும் ஹதீஃத் ஒன்றுகூட இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். விரலாட்டுவதில் குறியாக இருக்கும் மவ்லவிகளிடமும் ஆஸிம் பின் குலைப் இடம் பெறாத விரலாட்டும் ஹதீஃத் இருக்கிறதா? என்று கேட்டோம். அவர்களும் தங்களின் 33:36 இறைக் கட்டளைக்கு முரணான, சுய விளக்கங்களைக் கூறி விரலாட்டுவதை நியாயப் படுத்தினார்களே அல்லாமல், ஆசிம்பின் குலைப் இடம் பெறாத வேறு எந்த ஒரு ஹதீஃதையும் காட்டவில்லை.

4:59 இறைக் கட்டளைக்கு அடிபணிந்து கருத்து வேறுபாட்டைத் தீர்க்க குர்ஆன், ஹதீஃத் பக்கம் மீண்டுத் தீர பரிசீலனை செய்தோம். அதன்படி 17:36 இறைவாக்கு **"தெளிவான அறிவு இல்லாமல் ஒன்றைச் செய்ய வேண்டாம்"** என்று கட்டளையிடுகிறது.

**"உனக்குச் சந்தேகமானதை விட்டு விட்டுச் சந்தேகமில்லாததைக் கைகொள்"** புகாரீ(ர.அ.) 2052 என்று ஹதீஃத் கூறுகிறது. மேலும் 2:282, 5:106,65:2 இறைவாக்குகள் ஒரு விஷயத்தை ஆதாரபூர்வமாக ஏற்பதாக இருந்தால் அதற்கு இரண்டு சாட்சிகள் வேண்டும் என்று கூறுகிறது. இந்த இறைவாக்குகள், ஹதீஃத் எப்படிப்பட்டவர்களுக்கு பலன் அளிக்கும்? 4:59 இறைவாக்குக் கூறுவது போல் **"மெய்யாகவே அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புபவர்களாய் இருப்பவர்களுக்கே பலன் அளிக்கும். உலகியல் ஆதாயங்களைக் குறியாகக் கொண்டிருப்பவர்களுக்கு ஒருபோதும் பலன் அளிக்காது."** 17:41, 45, 46 இறைவாக்குகள் கூறுவது போல் இந்த குர்ஆன் வசனங்கள் அவர்களுக்கு வெறுப்பையே அதிகப்படுத்தும்.

ஹதீஃத் கலா வல்லுனர் இப்னு முதைனி, ஆசிம் பின் குலைப் தனித்தவராக அறிவிக்கிறார். வேறு யாரும் அறிவிக்கவில்லை. அதாவது இரண்டாவது சாட்சி இல்லை. அதனால் அவரது "விரலாட்டும் ஹதீஃதை" ஏற்க முடியாது என்று குர்ஆன், ஹதீஃத் போதனைப்படியே சொல்கிறார். அதற்கு மாறாக ததஜ மத்ஹப் நவீன இமாம்(?) என்ன கூறி இப்னுல் முதைனியின் அறிவிப்பை மறுக்கிறார்? அதற்கு அவர் காரணம் கூறவில்லையாம். அதனால் அதை ஏற்க முடியாதாம். இப்னுல் முதைனியின் குர்ஆன், ஹதீஃத் படியுள்ள கருத்தை, வேறு குர்ஆன், ஹதீஃத் கொண்டு மறுத்தால் அதை நாம் பரிசீலிக்கலாம். காரணம் சொல்லித்தான் குறை காண வேண்டும்

பிறரது உபதேசங்களைக் கேட்கவிடாமல் தடுப்பவர்கள் தாஃகூத் என்ற மனித ஷைத்தான்களே!

என்பதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டோம். அவரோ குர்ஆன், ஹதீஃத் ஆதாரம் தரவில்லை. அதற்கு மாறாக ஹதீஃத் கலா வல்லுநர்களின் ஏகோபித்த முடிவு (இஜ்மா) என தெனாவட்டாகப் பதில் அளித்தார். ஹதீஃத் கலா வல்லுநர்களில் ஒருவரான இப்னுல் முதைனிக்கு இந்த இஜ்மா சட்டம் தெரியாமல்தான் ஆசிம் பின் குலைப் பற்றி காரணம் சொல்லாமல் விமர்சித்துள்ளாரா? என்று கேட்டோம். பதில் இல்லை!

ஹதீஃத் கலா வல்லுநர்களின் இஜ்மாவை ஏற்பதாக இருந்தால், பிக்ஹு கலை இமாம்களின் இஜ்மாவையும் ஏற்கலாமே! ஏற்று மத்ஹபுகளை ஏற்கிறீர்களா? என்று கேட்டோம்; பதில் இல்லை. அது சரி! இஜ்மாவுக்கு குர்ஆன், ஹதீஃத் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டோம். இதுவரை பதிலில்லை. அதற்கு மாறாக இஜ்மாவுக்கு அதாவது ஏகோபித்த முடிவுக்கு எண்ணற்ற குர்ஆன் வசனங்கள் மறுப்புத் தெரிவிக்கின்றன. குறிப்பாக 6:116, 7:3, 32:13, 33:36, 11:118,119 இறைவாக்குகள் மிகப் பெரும்பாலோர் கோணல் வழிகளில்தான் இருப்பார்கள். வழிகேட்டில்தான் இருப்பார்கள் என்று நேரடியாகவே கூறுகின்றன என்றும் தெளிவு படுத்திவிட்டோம். 17:41 இறைவாக்குக் கூறுவது போல் இந்த குர்ஆன் வசனங்கள் அவர்களுக்கு வெறுப்பை அதிகப்படுத்துகின்றனவே அல்லாமல் இறையச்சத்தை ஏற்படுத்தவில்லை. 29:45 குர்ஆன் வசனம் கூறுவது போல், ஐங்காலத் தொழுகைகளைப் பேணித் தொழுதால் அல்லவா அது மானக்கேடானவற்றையும் தீயவற்றையும் விட்டுத் தடுக்கும். தொழுகையைப் பேணாதவர்களுக்கு, தொழுகையே அற்றவர்களுக்கு, ஜனங்களுக்குக் காட்டத் தொழுபவர்களுக்கு நேர்வழி எப்படிக் கிடைக்கும்? ஒருபோதும் கிடைக்க வாய்ப்பே இல்லை. (பார்க்க 7:175–179, 47:25)

மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட மவ்லவிகளின் இயற்கைக் குணம் என்ன தெரியுமா? அவர்கள் செய்யும் குர்ஆன், ஹதீஃதுக்கு முரண்பட்டச் செயல்களை மறுக்கும் நேரடி குர்ஆன் வசனங்களை, ஹதீஃத்களை எடுத்துக் காட்டினாலும் அவர்கள் அவற்றை ஏற்க மாட்டார்கள். அவர்கள் சொல்லும் சுய புராணங்களையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருப்பார்கள். அதாவது அரைத்த மாவையே மீண்டும் மீண்டும் அரைத்துத் தங்களின் பக்தர்களைத் தக்க வைக்கவே பெரும் முயற்சி எடுப்பார்கள்.

ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டில் அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்), 7ம் நூற்றாண்டில் இப்னு தைமிய்யா(ரஹ்) 12ம் நூற்றாண்டில் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப்(ரஹ்) போன்ற சீர்திருத்தச் செம்மல்களும், அவர்களது நேர்வழிப் போதனைகளை எடுத்து நடந்தவர்களும் எண்ணற்ற குர்ஆன் வசனங்களை எடுத்துக் காட்டி கபுரு வழிபாடு, சமாதிச் சடங்குகள், கூடு கொடி, கந்தூரி, கத்தம் ஃபாத்திஹா, செத்தவர்களை வசீலாவாகப் பரிந்துரைப்பவர்களாக ஆக்குவது இவை அனைத்தும் அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் கொடிய குற்றங்கள்; 2:186ல் அல்லாஹ் வழிகாட்டி இருப்பது போல் அல்லாஹ்வையே முற்றிலும் நம்பி, அவனிடமே நேரடியாக முறையிட வேண்டும். 2:186, 7:3, 50:16, 56:85 இறைவாக்குகளில் அல்லாஹ்வுக்கும் அடியார்களுக்குமிடையில் இறந்தவர்களையோ, உயிரோடிருப்பவர்களையோ இடைத்தரகர்களாகப் புகுத்தக் கூடாது என்று கூறும் இந்த குர்ஆன் வசனங்களை எடுத்துக் காட்டினாலும், பரேல்வி அகீதா உடைய மவ்லவிகள் ஏற்கிறார்களா? இல்லையே! 17:41,45-47,89 வசனங்கள் சொல்வது போல் அவர்களுக்கு வெறுப்பே ஏற்படுகிறது.

தங்களுடைய சுய புராணங்களை அவிழ்த்து விட்டு தர்கா வழிபாடுகளை நியாயப்படுத்தத்தானே செய்கிறார்கள். தர்கா சடங்குகளை முன்நின்று செய்யத்தானே செய்கிறார்கள். இதிலும் பெரிய வேதனை இந்த மூடச் சடங்குகளை மிகக் கடுமையாக எதிர்த்த அப்துல் காதிர் ஜீலானி(ரஹ்) அவர்கள் பெயராலேயே காதிரியா தரீக்கா என்ற வழிகெட்டக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதோடு, அவர்களை ஆயிரம் முறை அழைத்தால் அவர்கள் நேரில் ஆஜராகி உதவுகிறார்கள் (இருட்டு திக்ர்) என்ற மகா மகா மூட நம்பிக்கையையும் முஸ்லிம்களிடையே புகுத்தி அவர்களை நரகில் தள்ளி இந்த மவ்லவிகள் உலகியல் ஆதாயங்களை அடையத்தானே செய்கிறார்கள்.

எண்ணற்ற குர்ஆன் வசனங்கள்படியும், பல ஆதாரபூர்வமான ஹதீஃத்கள் எச்சரிக்கைப்படியும் ஹிஜ்ரி 400க்குப் பிறகுக் கற்பனை செய்யப்பட்ட மத்ஹபுகளும், ஹிஜ்ரி 500க்குப் பிறகுக் கற்பனை செய்யப்பட்ட தரீக்காக்களும் பகிரங்கமான வழிகேடுகளே நரகில் சேர்ப்பவையே (பார்க்க: 33:36, 66–68). இவை இந்த மவ்லவிகளின் ஆபாக்களின் கற்பனையில் உதித்தவையே. குர்ஆன், ஹதீஃதில் அணுவளவும் அனுமதியே இல்லாதவை என்பதற்கு நேரடி குர்ஆன் வசனங்களையும், ஹதீஃத்களையும் எடுத்துக் காட்டி எச்சரித்தாலும் இந்த பரேல்வி, தேவ்பந்தி மவ்லவிகள் ஏற்கிறார்களா? இல்லையே! அவர்களின் சுய புராணங்களைச் சொல்லித் தங்களின் வழிகெட்ட மத்ஹபுகளையும், தரீக்காக்களையும் நியாயப்படுத்தத்தானே செய்கிறார்கள். அரைத்த மாவையே அரைத்துக் கொண்டுதானே இருக்கிறார்கள். 7:55 இறைவாக்கு நேரடியாகத் தெளிவாக துஆ பணிவாகவும் அந்தரங்கமாகவும் மட்டுமே இருக்க வேண்டும் எனக் கூறுகிறது. நபி (ஸல்) அவர்கள் தொழுகைக் கடமையாக்கப்பட்டதிலிருந்து 11 வருடங்கள் சுமார் 19525 வக்து தொழுகைகளைத் தொழுது காட்டி இருக்கிறார்கள். அவற்றில் ஒரேயொரு தொழுகையில் கூட சப்தமிட்டு துஆ செய்து நபி தோழர்கள் சப்தமாக ஆமீன்

9:31 வசனப்படி இம்மதகுருமார்களை வழிபடுகிறவர்கள் நேர்வழி பெறவேமாட்டார்கள்.

சொன்ன ஆதாரம் அறவே இல்லை. அதற்கு மாறாக தொழுகையாளிகளுக்கு இடையூறாக குர்ஆனே ஓதக் கூடாது என்ற ஆதாரபூர்வமான ஹதீஃத் இருக் கிறது. *17:41,45-47,89* இறைவாக்குகள் கூறுவது போல் இவை அவர்களுக்கு வெறுப்பைத்தானே ஏற்படுத்துகின்றன.

இந்த நிலையில் இமாம் சலாம் கொடுத்த உடன் இரண்டாம், மூன்றாம், நான்காம் ரகாஅத்துகளில் வந்து சேர்ந்தவர்கள் எழுந்து தங்களின் பாக்கியுள்ள தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது அவர்களுக்கு இடையூறாக மைக்கில் சப்த மிட்டு துஆ செய்து முக்ததிகள் கோரசாக ஆமீன், ஆமீன் என்று கத்துவது பெரும் தவறும் வழிகேடு மாகும். கடினமான பித்அத்தாகும். குளிக்கப் போய் சேற்றை அள்ளிப்பூசினது போல், தொழுது முடித்த வுடன் ஒரு பித்அத்தை வழிகேட்டை, நரகில் சேர்க் கும் கொடிய செயலைச் செய்து பின்னால் வந்து தொழும் தொழுகையாளிகளுக்குப் பெருத்த இடை யூறை ஏற்படுத்துவது எந்த அடிப்படையில் நியாயம் என்று கேட்டுக் கொண்டிருந்தும், சு.ஜ. மவ்லவிகள் அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல், தங்களின் சுய புராணத்தைச் சொல்லியே பித்அத்தான கூட்டு துஆ வைச் செய்து கொண்டிருக்கவில்லையா? அரைத்த மாவையே அரைக்கவில்லையா?

*(பார்க்க: 17:41,45-47,89)*

அல்லாஹ் தனது தூதர் மூலம் காட்டித் தராத எந்த ஒரு அமலும் நன்மை பெற்றுத்தரும் நல்லமல் இல்லை, நரகில் கொண்டு சேர்க்கும் பித்அத்கள் என குர்ஆனும், ஆதாரபூர்வமான ஹதீஃத்களும் பட்ட வர்த்தனமாக அறிவித்துக் கொண்டிருக்க அவற்றை நிராகரித்து பித்அத்தான ஷபே மிஃராஜ், பித்அத் தான ஷபே பராஅத், ரமழான் பிறை 27ல் லைலத் துல் கத்ருடைய இரவு என்ற மூட நம்பிக்கையில் நாளை இரவு என்றும் 28ஐயோ, 29ஐயோ 27 என் றும் மக்களை மூட நம்பிக்கைகளில் மூழ்க வைத்து இந்த மவ்லவிகள் அற்ப உலகியல் ஆதாயங்களை அடைவதுடன் பெருங்கொண்ட மக்களை நரகில் தள்ளி ஷைத்தானுக்குத் துணை போவதை குர்ஆன் வசனங்களையும், ஹதீஃத்களையும் நேரடியாக எடுத்துக் காட்டினாலும் அவற்றை நிராகரித்துத் தங் களின் சுய புராணங்கள் மூலம் மக்களை மயக்க வில்லையா? அரைத்த மாவையே அரைக்க வில்லையா? *(பார்க்க 33:36, 66–68)*

பிறையைப் புறக்கண்ணால் பார்க்கச் சொல் லியோ, அதுவும் 29ம் நாளில் மட்டும் மாலையில் மறையும் பிறையைப் பார்க்கச் சொல்லியோ, ஒரேயொரு பலவீனமான, இட்டுக்கட்டப்பட்ட ஹதீஃதும் இல்லாத நிலையில், நபி(ஸல்) அவர்கள் அப்படித்தான் பார்க்கச் சொன்னார்கள் என்று நபி (ஸல்) பெயரால் அப்பட்டமான பொய்யைச் சொல்லி மக்களை நம்ப வைத்து, 3ம் நாளை முதல் நாளாக ஆக்கி, கட்டாயக் கடமையான முதல் இரண்டு ரமழான் நோன்புகளைப் பாழ்படுத்தியும், ஹராமான ஷவ்வால் ஒன்றில் நோன்பு நோற்க வைத்தும் மக்களை வழிகேட்டில் இட்டுச் செல் வதை குர்ஆன், ஹதீஃத் மூலம் தெளிவுபடுத்திய பின்னரும் சுய புராணங்ளைச் சொல்லி தொடர்ந்து மக்களை வஞ்சித்து நரகில் தள்ளும் தீச்செயல் தொடர்கிறதா இல்லையா? தொடர்ந்து அரைத்த மாவையே அரைக்கிறார்களா? இல்லையா?

*(பார்க்க: 17:41,45-47,89)*

தொப்பி மார்க்கத்தில் சுன்னத்தும் அல்ல; பித் அத்தும் அல்ல, ஆதத். வெளியில் தொப்பியோடு கூச்சமின்றித் திரிகிறவர்கள் தொழுகையிலும் அதே நிலையில் தொழுவது சிறப்பு. வெளியில் தொப்பி அணிந்து திரியக் கூச்சப்படுகிறவர்கள், பள்ளியில் தொப்பி அணிந்து தொழுவது வேஷமணிந்து நடிப் பதற்குச் சமம் என்று குர்ஆன், ஹதீஃத் ஆதாரங்கள் கொண்டு விளக்கினாலும் ஏற்கிறார்களா சு.ஜ. மவ்லவிகள்? இல்லையே! சுய புராணங்களைச் சொல்லி அரைத்த மாவையே அரைக்கவில்லையா? ஆக இப்படி நேரடி குர்ஆன், ஹதீஃத் வழிகாட்ட லுக்கு முரணாகத் தங்களின் சுய புராணங்களைச் சொல்லியே மக்களை வழிகேட்டில் இட்டுச் செல் கிறார்கள். தாஃகூத் என்ற நிலையில் இவர்கள் ஷைத்தானுக்குத் துணை போவதால், இப்லீஸ் ஷைத்தானும் இவர்களின் வழிகேட்டுச் சுய புரா ணங்களைப் பெரும்பாலான மக்களுக்கு அழகாகக் காட்டி வழிகெடுக்கிறான். அதனால் இந்த மவ்லவிக ளுக்குப் பின்னால்தான் பெரும் கூட்டம் சேர்கிறது. *(பார்க்க : 32:13, 11:118,119)* ஆம்! அல்லாஹ் அருள் புரிந்தவர்களைத் தவிர, மவ்லவிகளின் உடும்புப் பிடியில் சிக்கிய பெரும்பான்மையினர் நேர்வழி பெறவே முடியாது.

சு.ஜ. மவ்லவிகளை அடியொற்றி த.த.ஜ மவ்லவி களும் மக்களை வழிகெடுத்து நரகில் தள்ளுவதி லேயே குறியாக இருக்கிறார்கள். அவர்கள் சுன்னத் ஜமாஅத் என்ற பெயரால் பித்அத் ஜமாஅத்தாக இருப்பது போல், இவர்கள் தவ்ஹீத் ஜமாஅத் என்ற பெயரால் ஷிர்க் ஜமாஅத்தாக இருக்கிறார்கள். தவ்ஹீத் ஜமாஅத் என்றாலே ஏகத்துவக் கூட்ட மைப்பு என்பதுதான். அதாவது ததஜவினர் அல் லாஹ்வுடன் கூட்டுச் சேர்ந்துள்ளதாகப் பிரகடனப் படுத்துகின்றனர். *49:16* இறைவாக்கு சொல்வது போல் அல்லாஹ்வுக்கே மார்க்கம் கற்றுக் கொடுத்து அல்லாஹ்வுக்கு மேல் அல்லாஹ்வாக (நவூதுபில் லாஹ்) ஆகிறார்கள் ததஜவினர் *(பார்க்க 42:14,21)*. தீர்ப்பை அல்லாஹ் மறுமைக்கென்று ஒத்தி வைத்தி ருப்பதால் தப்பினார்கள். இல்லை என்றால் இங் கேயே நரகில் எறியப்பட்டிருப்பார்கள் என்றே இவ் வசனங்கள் கூறுகின்றன.

சுன்னத் ஜமாஅத், மத்ஹப்கள் பிரிவினர்களுக் கும் இவர்களுக்கும் அணுவளவும் வேறுபாடு இல்லை. இருசாராரும் ஒரே குட்டையில் ஊறிய

இந்த தாஃகூத்களான மனித ஷைத்தான்களின் பிடியிலிருந்து விடுபட்டு அனைவரது உபதேசங்களையும்

மட்டைகளே. தெளிவாகச் சொல்வதாக இருந்தால் சு.ஜ.வினரை விட ததஜவினர் பெருத்த வழிகேட்டில் இருக்கிறார்கள் என்பது தான் குர்ஆன், ஹதீஃத் வெளிப்படுத்தும் உண்மை. சு.ஜ.வினர் அல்லாஹ்வுக்கும் தங்களுக்குமிடையில் வஸீலாவாக-இடைத்தரகர்களைப் புகுத்துகிறார்கள். ததஜவினரோ அல்லாஹ்வுக்கு மேல் நாங்கள்தான் அல்லாஹ் (நவூது பில்லாஹ்); அல்லாஹ் மறுமைக்கென்று ஒத்திவைத்திருக்கும் தீர்ப்பை இவ்வுலகிலேயே அளிக்கும் வல்லமை பெற்றவர்கள் நாங்கள் என ஆணவத்துடன் செயல்படுகின்றனர். சு.ஜ.வினர் நிராகரிக்கும் அத்தனை குர்ஆன் வசனங்கள், ஹதீஃத்கள் அனைத்தையும் ததஜவினரும் அவர்களைப் போல் சுய புராணங்களைச் சொல்லியே நிராகரிக்கின்றனர். 21:92, 23:52 இறைக் கட்டளைக்கு அடிபணிந்து சமுதாய ஒற்றுமையைக் கட்டிக் காக்காமல் 21:93, 23:52–56 இறைவாக்குகள் கூறுவது போல் சமுதாயத்தைப் பிளவு படுத்துவதிலேயே குறியாக இருக்கிறார்கள். கடந்த 1000 வருடங்களாக மத்ஹபு பிரிவுகள் நான்காக மட்டுமே இருக்கும் நிலையில், 1987க்குப் பிறகு கடந்த 25 வருடங்களில் மட்டும் குர்ஆன், ஹதீஃத் மட்டுமே மார்க்க ஆதாரம் என்று வாயளவில் சொல்லிக் கொண்டு இன்று பத்துக்கும் மேற்பட்ட பிரிவுகளில் ஆகிவிட்டார்கள். இதிலிருந்தே ததஜவினர் சமுதாயத்தைப் பிளவு படுத்தும் ஜெட் வேகத்தைப் புரிந்து கொள்ள முடியும்.

சமுதாயத்தைப் பிளவுபடுத்தும் குறிக்கோளில் தான் பலவீனமான ஹதீஃத் சொல்லும் தொழுகை இருப்பில் விரலாட்டுவதை குரங்குப் பிடியாகப் பிடித்துத் தொங்குவதோடு கடந்த 25 ஆண்டுகளாக அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கின்றனர். ஹரக்கத்–ஆட்டுதல் என்பது வேறு, இஷாரா–சமிக்கை என்பது வேறு என்று பச்சைப் பிள்ளைக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது போல் சொல்லிக் கொடுத்தும் இன்று வரை அவர்களின் சுய புராணத்தையே மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறார்கள். ஹரக்கத் என்ற அரபி பதம் எவ்விதப் பொருளும் இல்லாத வெற்று ஆட்டலைக் குறிக்குமே அல்லாமல் எதையும் உணர்த்தாது. அதற்கு மாறாக இஷாரா-Signal-சமிக்கை கண்டிப்பாக ஒரு பொருளை உணர்த்தும். அது சுட்டிக்காட்டுவதாக இருக்கலாம். அழைப்பதாக இருக்கலாம், மறுப்பதாக இருக்கலாம். எச்சரிப்பதாக இருக்கலாம். இஷாரா–சமிக்கை மூலம் ஒரு பொருள் உணர்த்தப்படவில்லை என்றால் அது இஷாரா இல்லை, சமிக்கை இல்லை. ததஜ நவீன மத்ஹப் இமாம்(?) கற்பனையாகச் சொல்வது போல் யுஹர்ரிக்குஹா யதுவூபிஹா, அழைப்பது போல் ஆட்டினார்கள் என்பதில் ஆட்டம் எப்படி இருந்தது என்று அறிவிக்கிறதே அல்லாமல், எப்பொருளையும் உணர்த்தவில்லை. எனவே இஷாராவுக்கு மேல் விளக்கமாக இருக்கிறது என்று கூறுவதை விட அறிவீனம் வேறு இல்லை! இஷாராவுக்கும், ஹரக்கத்துக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது, கடினமான பசை வைத்து ஒட்டினாலும் ஒட்டாது. மேலும் அசைத்துச் சுட்டிக் காட்டினார்கள் என்று அவர் கூறுவது முற்றிலும் அபத்தமாகும். நீட்டிச் சுட்டிக்காட்ட முடியுமே அல்லாமல் அசைத்துச் சுட்டிக் காட்ட முடியாது.

தன்னுடைய பொருளற்ற சொத்தை வாதத்தை நிலைநாட்ட எப்படிப்பட்ட அமானித மோசடி செய்துள்ளார் என்று பாருங்கள். "யுஹர்ரிக்குஹா யதுவூபிஹா'' என்ற வசனத்திற்கு "அசைத்தவர்களாக அழைத்தார்கள்" என்றோ அசைத்தவர்களாக துஆ செய்தார்கள்" என்றோதான் பொருள் கொள்ள வேண்டும். "அழைப்பதுபோல் அசைத்தார்கள்'' என்று பொருள் சொல்வது பெருந்தவறு. அப்படியானால் துஆ செய்வது போல் அசைத்தார்கள் என்று சொல்வாரா? இதை நாம் சொன்னால் அபூ அப்தில்லாஹ் மவ்லவி அல்ல, அவருக்கு அரபி நூலின் அட்டையைக் கூட படிக்கத் தெரியாது. அவர் இப்படிச் சொல்வது கால் காசும் பெறாது என்று அபூ ஜஹீலின் வாதத்தை வைத்து அவரது பக்தர் களை எளிதாக ஏமாற்றிவிடுவார். அவர்களின் அகரா திப்படி பீ.ஜை. தமிழக மதரஸாவில் ஓதி ஒரேயொரு பட்டம் பெற்றவர் மட்டுமே. அதற்கு மேல் படித்த வர் அல்லர். ஆனால் கலாநிதி, யூ.எல்.ஏ. அஷ்ரப் Ph.D.,Al-Azhar இலங்கை மதரஸாவில் ஓதி பட்டம் பெற்றவர் மட்டுமல்ல. அதற்கு மேலும் அல்அஸ் ஹர், மதீனா எனப் படித்து பல பட்டங்கள் பெற்ற வர். அரபி மொழியை பீ.ஜை.யை விடத் திறம்படக் கற்றவர். அவர் கூறுகிறார். அதாவது அரபி மொழியில் ஆய்வு செய்து கலாநிதி(டாக்டர்) பட்டம் பெற்றவர் கூறுகிறார். அவரது அரபி மொழித் திறமைக்கு முன்னால் பீ.ஜையின் திறமை கால் காசும் பெறாது அவரது வாதப்படியே!

**ஹதீஸுக்கு நகைச்சுவையான மொழி பெயர்ப்பும் அதற்குரிய மறுப்பும்:**

**விரலாட்டுவதை ஆதரிக்கும் தமிழ்நாட்டு சகோதரர் ஒருவர் விரலாட்டினார்கள் எனக் கூறும் பலவீனமான ஹதீஸில் காணப்படும் வாக்கியத்துக்கு தவறான மொழி பெயர்ப்பை வழங்கியுள்ளார். அதை சில மதரஸா மாணவர்களும் நம்பி ஏமாந்து விட்டார்கள். அதாவது மேற்படி ஹதீஸில் காணப்படும் ''யதுவூபிஹா'' என்ற வாக்கியத்திற்கு "(யாரையோ) அழைப்பது போன்று" என மொழி பெயர்த்துள்ளார். இது மாபெரும் தவறாகும். இது அவரின் அரபு பாஷை பற்றிய அறிவின்மையையும், ஹதீஸின் ஏனைய ரிவாயத்துகள் பற்றிய அறிவின்மையையும் அப்பட்டமாக்குகிறது.**

பீ.ஜை.யைவிட அரபி மொழியில் பாண்டித்தியம் உள்ளவர் பீ.ஜையின் அரபி மொழி அறிவின்மையை அம்பலப்படுத்தியுள்ளார். "யுஹர்ரிக்குஹா யதுவூபிஹா'' என்ற அரபி வாக்கியத்தை "அசைத்

கேட்டு அவற்றில் குர்ஆன், ஹதீஸ்படி உள்ளதை எடுத்து நடப்பவர்களே நேர்வழி நடப்பவர்கள்.

தவர்களாக அதைக் கொண்டு துஆ செய்தார்கள்" என்றும் தமிழில் கூறலாம். அல்லது "அசைத்தவர் களாக அதைக் கொண்டு அழைத்தார்கள்" என்றும் தமிழில் கூறலாம். "அசைத்தவர்களாக அது கொண்டு அழைத்தார்கள்" என்று பலவீனமான அந்த ஹதீ ஸில் உள்ளது உள்ளபடி மொழிபெயர்த்தால், அவ ரது மூடத்தனமான வாதத்திற்கே அது முரண்படு கிறது. காரணம் தொழுகையில் யாரையும் அழைக்க முடியாது. தனது வழிகெட்டத் திரிபு வாதங்களை நிலைநாட்ட குர்ஆன் வசனங்களிலும், ஹதீஃத்களி லும் திரிபு வேலை செய்வதில் பீ.ஜைக்கு இருக்கிற அசாத்தியத் துணிச்சல் வேறு யாருக்கும் இருப்பதாக நாம் இதுவரை அறியவில்லை. 3:7 இறைவாக்கில் முத்தஷா பிஹாத் வசனங்களின் முடிவான இறுதிப் பொருளை அல்லாஹ் மட்டுமே அறிவான் என்றி ருப்பதை அல்லாஹ்வும் அறிவான், அறிஞர்களும் அறிவார்கள் என்று எழுதி, அறிஞர்களை அல்லாஹ் வின் நிலைக்கு உயர்த்தியும், அல்லாஹ்வை மனித நிலைக்குத் தாழ்த்தியும் எழுதி ஷைத்தானுக்குத் துணை போய் உள்ளார். 2:102 இறைவாக்கில் "பாபி லோனில் ஹாரூத், மாரூத் என்னும் இரு மலக்குகள்" என்று நேரடியாக இருப்பதை "இரண்டு ஷைத்தான் கள்" என்று மொழி பெயர்த்துத் தனது "தாஃகூத்" நிலையை உறுதிப்படுத்தியுள்ளார். இன்னும் பல இடங்களில் ஷைத்தானின் வேலையை மிகமிகத் திறம்படச் செய்துள்ளார்.

1999 நவம்பர் & டிசம்பர் அல்முபீன் இதழில், பக்கத்துக் கிராமத்தினர் அறிவிக்கும் செய்தியில் "ஷஹிதூ" என்றிருப்பதை சாட்சி சொன்னார்கள் என்று சரியாக மொழி பெயர்த்தவர், தூரத்து வாகனக் கூட்டம் அறிவிக்கும் செய்தியிலுள்ள "ஷஹிதூ" என்ற அதே பதத்திற்கு கூறினார்கள், சொன்னார்கள் என ஓர் இடத்தில் அல்ல நான்கு இடங்களில் திரித்து எழுதியுள்ளார். காரணம் அங்கு சாட்சி சொன்னார்கள் என்று சரியாக மொழி பெயர்த்தால், அந்தச் சட்டம் வாகனக் கூட்டத்திற் குச் சொல்லப்பட்டது, நபி தோழர்களுக்கு அல்ல என்ற அவரது மகா மகா அபத்தமான விளக்கத்தின் போலித் தனத்தை அம்பலப்படுத்தி விடும். எனவே இந்தத் திருவிளையாடல்(?).

இப்படி குர்ஆன் வசனங்களிலும், ஹதீஃத்களி லும் பீ.ஜையின் திருகுதாளங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கேவலம் அற்பமான உலகி யல் ஆதாயங்களுக்காகவும், நரகை நோக்கி நடை போடும் பெருங்கூட்டத்தைச் சேர்க்கவும் இப்படி வேடமிடாமலேயே நடிக்க வேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்படுகிறது. (பார்க்க: 32:13, 11:118,119, 2:159–162). அந்த வரிசையில்தான் விரலாட்டும் பலவீனமான ஹதீஃதை தூக்கி நிறுத்தப் பெரும் பாடு படுகிறார்.

"யுஹர்ரிக்குஹா யதுவூபிஹா" என்ற அரபி வாச கத்தை அழைப்பது என்ற பொருளில் தமிழில் சொல் வதாக இருந்தால், "அசைத்தவர்களாக அதைக் கொண்டு அழைத்தார்கள்'' என்றே சரியாக நேரடியாகச் சொல்ல வேண்டும். அப்படி உள்ளதை உள்ளபடிச் சொன்னால் அவரது குருட்டுவாதம் அடிபட்டுப் போகும். காரணம் தொழுகையில் யாரையும் அழைக்க முடியாது. எனவே அழைப்பது போல் அசைத்தார்கள் என்று தனது சொந்தச் சரக்கை அவிழ்த்து விடுகிறார். அவர்களது விவஸ் தைக் கெட்ட சுய விளக்கத்தைப் பாருங்கள். "முர ணாக அறிவிப்பது வேறு! கூடுதலாக அறிவிப்பது வேறு! இந்த நுணுக்கமான வேறுபாட்டைக் கவனிக்காமல் நுனிப்புல் மேய்வதால் இவ்வாறு வாதிடுகிறோமாம். யார் நுனிப்புல் மேய்கிறார்? யார் ஆழ்ந்து சிந்தித்துச் சொல்கிறார்? என்பது அவரது சூன்யப் பேச்சில் மயங்கும் முகல்லிதுக ளுக்கு விளங்காமல் இருக்கலாம். காரணம் எவ்விதச் சிந்தனையுமில்லாமல் அவர் சொல்வதை அப் படியே வேதவாக்காக ஏற்பவர்கள் தானே அவர் கள். சிந்திப்பவர்களுக்கு நிச்சயமாக விளங்கும் என் பதை அவரது உதாரணம் கொண்டே புரிய வைப்போம்.

"சலீம் கோழிக்கறி சாப்பிட்டார் என்று ஐந்துபேர் கூறுகிறார்கள். ஒருவர் மட்டும் சலீம் சிக்கன் 65 சாப்பிட்டார் என்று கூறுகிறார். இவ்விரு செய்தி களும் முரண்பட்டவை அல்ல. ஒன்றை ஒன்று மறுக் கும் வகையில் இது அமையவில்லை, என்று கூறியிருக்கிறார். உண்மைதான் கோழி என்று தமிழில் சொல்வதும் சிக்கன் என்று ஆங்கிலத்தில் சொல்வதும் ஒன்று தான். அதே சமயம் "சலீம் கோழிக்கறி சாப்பிட்டார்" என்று ஒருவரும் மற்ற வர் "சலீம் ஆட்டுக்கறி சாப்பிட்டார்" என்றும் சொன்னால் இரண்டிலும் கறி என்ற வார்த்தை வந்துள்ளது. அதனால் முரண் இல்லை என்று சொன்னால், சுய சிந்தனையுடையோர் ஏற்பார் களா? "சட்டம்" என்று சொன்னால் சட்டசபையில் நிறைவேறியச் சட்டமும், ஆசாரி செதுக்கியச் சட்ட மும் ஒன்றுதான் என்று ஒரு அறிவீனன் சொன்னால் அதை ஏற்போமா? இல்லையே!

இதே போல்தான் சுட்டிக்காட்டல், அழைத்தல், மறுத்தல், எச்சரித்தல் என பொருளுள்ள இஷாரா வும், பொருளற்ற வெற்றசைவான ஹரக்கத்தும் ஒன்றுதான், இஷாராவுக்கு மேல் விளக்கம் ஹரக்கத் என்று கூறுவதும் அறிவீனமான கூற்றே. நகைப்பிற் கிடமான கூற்றே! நுனிப்புல் மேய்ந்தவரின் கூற்றே யாகும். காரணம் பொருளற்ற வெற்று அசைவான ஹரக்கத்துக்கும், பொருளுள்ள சமிக்கையான இஷாராவுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது, கடும் பசை வைத்து ஒட்டினாலும் ஒட்டாது என்று முன் னரே விளக்கியுள்ளோம். எனவே ஆஸிம் பின்குலை பிடம் செய்தி கேட்ட 14 நபர்களில் 13 நபர்கள் சுட்டிக் காட்டினார்கள் என்று கூறுவதற்கு மாறாக ஸாயிதா என்ற தனி நபர் அசைத்தார்கள் என்று

அனைவரது அறிவுரைகளைக் கேட்பவர்களுக்கே அல்லாஹ்வின் நன்மாராயமும் பாராட்டும் கிடைக்கிறது!

கூறுவது முற்றிலும் முரணான கூற்றாகும். நஸாயி 1148 ஹதீஃத் கூறுவது போல் தொழுகை இருப்பில் விரலாட்டுவது ஷைத்தானின் செயலாகும். கஃபதுல் லாஹ்வை சுட்டிக்காட்டி நீட்டுவதே நபி வழியாகும். ததஜ மத்ஹப் இமாம்(?) இந்த உண்மையை ஏற்றால் அவரது நவீன மத்ஹபே ஆட்டம் கண்டு விடும். இஷாராவும், ஹரக்கத்தும் ஒன்றுதான் என நிலைநாட்ட இதுபோல் அறிவீனமான வாதங்களை அடுக்கடுக்காக எடுத்து வைத்துள்ளார். ஆனால் ஒன்றை மறந்துவிட்டுத் தனது வீண் வாதங்களை எடுத்து வைக்கிறார். அவர் கூறுவது போல் அசைத்தும் இஷாரா செய்ய முடியும்; அதற்குக் கண்டிப் பாகப் பொருள் இருக்கும். அதில் அழைப்பதோ, மறுப்பதோ, எச்சரிப்பதோ கண்டிப்பாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக தொழுகை இருப்பில் விரலசைப்பது பொருளற்ற அசைப்பாகும். காரணம் தொழுகையில் யாரையும் எச்சரிக்கவும் முடியாது. கூப்பிடவும் முடியாது. நஸாயீ 1148 ஹதீஃத் கூறுவது போல் கிபுலாவைச் சுட்டிக் காட்ட மட்டுமே முடியும்.

மீண்டும் உறுதியாகவும் நேரடியாகவும் சொல்கிறோம். இஷாராவில் அசைத்தலும் உண்டு. ஆனால் அந்த அசைத்தல் கண்டிப்பாக ஒரு பொருளை உணர்த்த வேண்டும். பொருளற்ற ஓர் அசைவு நிச்சயமாக இஷாரா–சமிக்கையில் வரவே வராது. அது போலவே அழைப்பது போல் அசைத்தலும் ஒருபோதும் இஷாரா–சமிக்கையில் வரவே வராது. காரணம் அதில் அசைவு எந்த வகையில் இருந்தது என்று விளக்கப்படுகிறதே அல்லாமல் இஷாராவுக்குரிய அழைத்தலோ, மறுத்தலோ, எச்சரித்தலோ அந்த அசைவில் இல்லை.

இதே போல் "நஸப" அரபி பதத்திற்கு நீட்டினார்கள், நட்டினார்கள், உயர்த்தினார்கள் என்று சில ஆதாரங்களை அடுக்கி விட்டு, இந்த விளக்கங்களை மீண்டும் ஒரு முறைப் படித்தால் இந்தச் செய்தியில் விரலை அசைக்கக் கூடாது என்ற கருத்து நேரடியாகவோ மறைமுகமாகவோ கூறப்படவில்லை என்பதை அறியலாம் என அர்த்தமற்றுப் பிதற்றி இருக்கிறார். நீட்டினார்கள், நட்டினார்கள், உயர்த்தினார்கள் போன்ற பதங்களுக்கும் அசைப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? இது அறிவீனர்களின் பிதற்றல் அன்றி வேறென்ன? தங்களின் தவறான சொத்தை வாதத்தை நிலைநாட்ட மரம் செடி கொடிகளை நடுதல் என்ற பொருளும் உள்ளது. நடப்பட்ட மரம் செடி கொடிகள் அசையக் கூடியவையாகும். இவை அசைவதால் இவை நட்டப்படவில்லை என்று யாரும் சொல்ல மாட்டோம் என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டிருக்கிறார்கள். மரம், செடி, கொடி அசைவதால் நடப்பட்ட இடமும் அசையும் என்று மூளையற்ற முரட்டு வாதத்தை யாரிடம் சொன்னாலும் அவர்கள் வாய்விட்டுச் சிரிப்பார்கள். அவரின் ஆதரவாளர்களுக்கு வேண்டுமானால் இது வேதவாக்காக இருக்கலாம்.

"பலஹீனமான ஹதீஸ்களுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை'' என்று அவர்களே எழுதிய நிலையில் ஆஸிம்பின் குலைப் மட்டுமே இடம் பெறுவதோடு 14 நபர்களுக்கு முரணாக ஒரேயொரு நபர் அசைப்பதைச் சொல்வதான பலவீன மான ஹதீஸை தூக்கி நிறுத்த இப்படிப் பல பக்கங்களை வீணடிக்கிறார்கள். பலவீனமான ஹதீஃத்களுக்கெல்லாம் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என்று நாம் சொன்னாலாவது அதில் பொருள் இருக்கிறது. ஸாயிதாவின் சொல் மேலதிகமான விளக்கம் அல்ல அது இஷாராவுக்கு முற்றிலும் முரணான சொல் என்பதை முன்னரே விளக்கியுள்ளோம். விரலசைப்பதற்கு ஆதாரபூர்வமான ஹதீஸூம் இல்லை, முன்னோர்களின் நடைமுறையிலும் இல்லை; அதே சமயம் நபி(ஸல்) அவர்களின் ஆதாரபூர்வமான ஹதீஃத் இருந்தால் அதைப் பின்பற்றுவதுதான் நேர்வழி என்பதில் எமக்கும் மாற்றுக் கருத்து இல்லை. அதே சமயம் பலவீனமான ஹதீஸை தங்களின் சூனிய வசீகரப் பேச்சால் தூக்கி நிறுத்த முற்படுவது தாஃகூத் என்ற மனித ஷைத்தான்களின் வேலையே அல்லாமல் நேர்வழி நடப்பவர்கள் ஒருபோதும் இப்படி வரட்டு வாதம் செய்ய மாட்டார்கள். "யத்ஊபிஹா" என்ற வார்த்தைக்கு பிரார்த்திப்பவர்களாக என்றும் அழைப்பவர்களாக என்றும் பொருள் கொள்ள முடியுமே அல்லாமல் அழைப்பது போல் என்ற பொருள் அதற்கு இல்லவே இல்லை. தொழுகையில் பிரார்த்திக்க முடியுமே அல்லாமல் யாரையும் அழைக்க முடியாது என்பதால், விரலாட்டலை நிலைநாட்ட ததஜ மத்ஹப் இமாமின் தகிடுதத்தமே இது. மற்றபடி பிரார்த்திப்பவர்களாக என்பதற்கு மாறாகப் பிரார்த்திப்பது போல் என்று மொழி பெயர்த்தால் அது எத்தனைப் பெரிய வழிகேடோ அதுபோல் அழைப்பது போல் என்று கூறுவதும் பெரும் வழிகேடே. கேவலம் தங்களின் புதிய ததஜ மத்ஹபை நிலைநாட்ட இப்படியா வழிகெட்டுச் செல்ல வேண்டும்?

ஆஸிம்பின் குலைப் ஒருவராக மட்டும் தனித்து இடம் பெறும் ஆயிரம் பலவீனமான ஹதீஃத்களைக் காட்டினாலும் அதனால் அது பலமான ஹதீஃத் ஆகாது. 17:36, இறைவாக்கு சந்தேகமானதை எடுத்து நடக்கக் கூடாது என்ற அடிப்படையிலும் 2:143, 282, 5:106, 65:2 இறைவாக்குகள் ஆதாரபூர்வமானதாக எடுக்க இரு சாட்சிகள் வேண்டும் என்று கூறுவதின் அடிப்படையிலும் விரலாட்டும் ஹதீஃத் பலவீனப்பட்டுப் போகிறது. ஐந்தாவது மத்ஹபான ததஜவின் இமாம்(?) தன் சுய புராணங்கள் மூலம் அதை ஆதாரபூர்வமானதாக்க முயல்வது தாஃகூத் என்ற மனித ஷைத்தானின் வேலையாகும். ஆஸிம் பின்குலைப் இடம் பெறாத

அவர்களையே அறிவாளர்களாக அல்லாஹ் புகழ்கிறான் என்று 39:17,18 இறைவாக்குகள் கூறுகின்றன.

வேறொரு ஹதீஃதைக் காட்டி தனது மத்ஹப் கொள்கையை நிலை நாட்டட்டும். கேவலம்! புதி தாகக் கற்பனை செய்த புதிய ஐந்தாவது மத்ஹபை நிலைநாட்ட இப்படியா தரம் தாழ்ந்துச் செல்ல வேண்டும். ஆம்! அவர்களின் கற்பனையான புதிய ஐந்தாவது மத்ஹபை நிலை நாட்ட பூர்வீகப் பள்ளிகளின் இமாம்கள் பின்னால் தொழக்கூடாது, தொழுகை இருப்பில் விரலை ஆட் டியே தீரனும் என்பதில் அவர் பிடிவாதமாக இருந்தே தீரனும். அவற்றில் மாற்றுக் கருத்துக் கொண்டால் அவரின் 5வது மத்ஹப் செயலற்றதாக ஆகிவிடும். விடுவாரா? அவரது மனோ இச்சை அதற்கு இடம் கொடுக்குமா? (பார்க்க : 2:120, 4:135, 6:56, 150, 7:176. 20:16, 25:43, 28:50, 38:26, 79:40)

ஐந்தாம் மத்ஹபின் நவீன இமாமின் முனாபிக் தனத்தை, நயவஞ்சகத்தை, பச்சோந்தித் தனத்தை அவரின் சூனிய வசீகரப் பேச்சில் மயங்கி அவர் பின்னால் கண்மூடிச் செல்லும் இளைஞர் கூட்டத்தில் அல்லாஹ் நாடும் ஒரு சிலராவது சிந்தித்துச் சீர்திருந்தி நேர்வழிக்கு வரமாட்டார்களா? என்ற நல்லெண்ணத்தில் வெளிப்படுத்துவது காலத்தின் கட்டாயமாக இருக்கிறது.

தொழுகை இருப்பில் விரலாட்டுவது இரண்டு அடிப்படைக் காரணங்களால் பலகீனமடைகிறது. ஒன்று ஆசிம் பின்குலைப் ஒரே ஒரு சாட்சியாகத் தனித்து அறிவிப்பது, இரண்டாவது ஆஸிம் பின் குலைபிடம் கேட்ட 14 நபர்களில் 13 நபர்கள் சுட்டிக்காட்டினார்கள், நட்டினார்கள் என்று கூறும் நிலையில் ஸாயிதா என்பவர் மட்டும் அதற்கு முரணாக அசைத்தார்கள் என்று கூறுவதாகும். ததஜ இமாம்(?) இங்கு இப்னுல் முதைனி காரணம் சொல்லவில்லை என்றும், இஷாராவான சுட்டிக் காட்டுவதற்கு மேல் விளக்கம் அசைத்தல் என்றும் கடந்த சுமார் 18 ஆண்டுகளாக சுய புராணத்தைச் சொல்லி ஷைத் தானின் செயலான விரலாட்டலை (பார்க்க நஸாயி 1148) தூக்கி நிறுத்தப் பகீரதப் பிரயத்தனம் செய்கி றார். இங்கு அவருக்கு அல்லாஹ்வுடன் கூட்டு சேர்ந்துள்ள தனது வழி கெட்ட ததஜவை தூக்கி நிறுத்தும் கட்டாயம் இருக் கிறது. விரலாட்டுவது தவறு என்று நிலைநாட்டப் பட்டால் அவரது ததஜவும் ஆட்டம் கண்டு விடும். விரலாட்டலை நிலைநாட்ட ஏற்கத்தக்கவர் என்று அவர் கூறும் ஆஸிம் பின் குலைப், தொழுகையில் நான்கு இடங்களில் கைகளை உயர்த்துவது (ரஃபயல் யதைன்) கூடாது என்று சொல்லும் செய்தியில் இதே ஆஸிம் பின் குலைப் ஏற்கத்தகாதவர் ஆகிவிடுகிறார். இந்த இரட்டை வேடத்திற்குக் காரணம், ஹனஃபிகள் கைகளை உயர்த்துவ தில்லை. அவர்களது பள்ளிகளில் அதற்கு மாறாகக் கைகளை உயர்த்தி, குழப்பத்தை ஏற்படுத்தி ஊரை இரண்டாக்கி தனிப் போட்டிப் பள்ளிக் கட்டி உல கியல் ஆதாயங்களை அடைய வேண்டும் என்பதே அசலான குறிக்கோள். (பார்க்க : 2:200)

ஒரு தபஅதாபியீயான ஆஸிம் பின் குலைபையும் அவரது 14 மாணவர்களில் 13 மாணவர்களுக்கு முரண்பட்டுக் கூறும் ஸாயிதாவையும் நல்லவர் களாக்க இந்த அளவு அரும்பாடு பட்டுக் கடந்த 18 வருடங்களாக முயல்கிறவர், ஜகாத் கடமையாக்கப் பட்டதிலிருந்து சுமார் 10 வருடங்கள் நபி(ஸல்) அவர்கள் கூடவே இருந்து ஜகாத்தை எப்படி வசூலித்தார்கள் என்பதைக் கண்ணால் பார்த்தவர்கள், அவர்களும் நேரில் சென்று ஜகாத்தை வசூலித்து வந்தவர்கள், நபி(ஸல்) அவர்களின் மிகமிக நெருங் கியத் தோழர்கள், சுவர்க்க நன்மாராயம் பெற்றவர் கள், ஒருவர் நபி(ஸல்) அவர்களுக்கு தன் மகளைக் கொடுத்த மாமனார், மற்றவர் மகளைக் கட்டிய மருமகன், நபி(ஸல்) அவர்களுக்குப் பிறகு 2வது, 4வது கலீஃபாக்களாக இருந்து நீண்ட காலம் ஜகாத்தை வசூலித்து விநியோகித்தவர்களான உமர்(ரழி) அவர்களும், அலீ(ரழி) அவர்களும், பொருள் கிடைத்து ஒரு வருடம் தேக்கி வைத்தால் தான் ஜகாத் கடமை, அப்பொருள் தேக்கிவைக்கப் பட்டிருக்கும் காலமெல்லாம் வருடா வருடம் ஜகாத் கடமை என்று கூறுவதை ஏற்க முடியாதாம். அவர்கள் இருவரும் கூறுவது பலமான செய்தி இல்லையாம். பலகீனமான செய்தியாம். இதுவே 5வது புதிய மத்ஹபின் நவீன இமாமின்(?) ஃபத்வாவாகும்.

இவரிடம் ஆஸிம் பின் குலைபை விட, ஸாயி தாவை விட, உமர்(ரழி) அவர்களும், அலீ(ரழி) அவர்களும் தரமற்றவர்களாகப் போய்விட்டார்கள் என்றால் ததஜ இமாம்(?) எந்த அளவு மெகா வழி கேட்டில் இருக்கிறார் என்பதைப் புரிய முடியாத வர்கள் நேர்வழி நடப்பவர்களாக இருக்க முடியுமா? சிந்தியுங்கள். கண்ணுக்குத் தெரியும் 3ம் பிறையே முதல் பிறை என்பதை நிலைநாட்ட பல வீனமான, இட்டுக் கட்டப்பட்டப் பொய்ச் செய்தி களை எல்லாம் ஆதாரமாகக் காட்டி அப்படிப்பட்ட பொய்யர்களை உமர்(ரழி) அவர்களைவிட, அலீ (ரழி) அவர்களை விடத் தரமானவர்களாக நிலை நாட்டும் 5வது மத்ஹபான ததஜவின் இமாம்(?) எப்படிப்பட்டக் கொடும் வழிகேடராக இருப்பார் என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள். ஆம்! விர லாட்டும் பலவீனமான ஹதீஃதை பலமானது என்று நிலைநாட்டினால்தான், அவரது 5வது மத்ஹபை வளர்த்து உலகியல் ஆதாயம் அடைய முடியும். கொடுத்த பொருளுக்கே அது தடுத்து நிறுத்தப்படும் காலமெல்லாம், 59:7 இறைக் கட்டளைப்படி வெளியே செல்ல வேண்டிய செல்வத்தை செல்ல விடாமல் தடுத்து வைத்திருக்கும் காலமெல்லாம் வருடா வருடம் ஜகாத் கடமை என்பதை தனது குயுக்தி, சூனிய, வசீகர பேச்சால் மாற்றி, அதன் மூலம் பெரும் செல்வந்தர்களைக் குஷிப்படுத்தி அவர்கள் விட்டெறியும் அற்பக்காசு மூலம் தனது 5வது மத்ஹபான ததஜவை மேலும் வளர்க்கலாம்

மவ்லவி புரோகிதர்களின் சுயநல, வசீகர உடும்புப் பிடியிலிருந்து விடுபட படியுங்கள், பரப்புங்கள் அந்நஜாத்!

என்ற சூது மதியுடன் சொல்வது தான் ஒரு பொருளுக்கு ஒரு முறைதான் ஜகாத். ஒரு முறை ஜகாத் கொடுத்துவிட்டால் அது நூறாண்டுகள் அச்செல்வந்தர்களிடம் முடக்கி வைக்கப்பட்டாலும் அதற்கு ஜகாத் கடமை இல்லை என்ற குருட்டுச் சட்டம் – ஃபத்வா.

ஐந்தாவது மத்ஹபான அவரது ததஜ மத்ஹபைத் தூக்கி நிறுத்த அதில் இருப்பவர்கள் மட்டும்தான் முஸ்லிம்கள். மற்றவர்கள், சூனியத்தை நம்புகிறவர்கள் அவர் மஸ்ஜிதுல் ஹரம் இமாமானாலும் அனைவரும் முஷ்ரிக்குகள், காஃபிர்கள், அவர்கள் பின்னால் நின்று தொழுபவர்களின் தொழுகை வீண், இறைவனால் ஏற்றுக் கொள்ளப் படாது என்ற குருட்டு ஃபத்வா. அதற்கு மாறாக அரசியல் ஆதாயங்களை அடைய முஸ்லிம்கள் என்று சொல்வோர் அனைவரும் முஸ்லிம்கள்தான். எங்களோடு இணைந்து நாங்கள் நடத்தும் போராட்டம், பந்த், சாலை மறியல் போன்றவற்றில் கலந்து கொள்ள வாருங்கள் வாருங்கள் என்று வலிந்து அழைக்கும் கொடூரம். பார்த்தீர்களா பள்ளியில் முஷ்ரிக், காஃபிரானவர்கள் வீதியில் முஸ்லிம்களாகிய மகிமையை(?) ஆம்! 5வது மத்ஹபு இமாம் விரும்பினால் முஸ்லிம்களை காஃபிர் முஷ்ரிக்காக்குவார், அவர் விரும்பினால் காஃபிர், முஷ்ரிக்களை முஸ்லிமாக்குவார். ஆம்! அல்லாஹ்வுக்குமேல் அல்லாஹ் (நவூதுபில்லாஹ்) என்று அதிகாரம் பெற்றவர், அல்லாஹ்வுக்கே மார்க்கத்தைக் கற்றுக் கொடுப்பவர் (பார்க்க 49:16), அல்லாஹ் விதிக்காததை எல்லாம் விதிக்கும் அல்லாஹ்வுக்கு மேல் அதிகாரம் (நவூது பில்லாஹ்) பெற்றவர் 5வது மத்ஹபான ததஜ நவீன இமாம்(?) (பார்க்க 42:14,21) இவரது இறுதி முடிவு அல்லாஹ்விடமே இருக்கிறது!

மேலும் அவரின் முன்னுக்குப் பின்னான முரண்பட்ட இரட்டை நிலையை அவருடைய ததஜவில் இருந்து விலகிய சகோதரர் எஸ்.முஹம்மது ஸலீம் பிட்டு பிட்டு வைத்துள்ளார். அவற்றை அந்நஜாத் ஜுலை இதழ் பக்கம் 19லும், ஆகஸ்ட் இதழ் பக்கம் 9லும் பார்த்து அறியலாம். எந்த மவ்லவியையும், மனிதர்களில் எவரையும் நம்பிப் பின்பற்றாமல் அல்லாஹ் 2:186ல் கட்டளையிட்டிருப்பது போல், அவனையே முற்றிலும் முழுதுமாக நம்பி, அவனிடமே கேட்டு, அல்குர்ஆனிலும், அல்ஹதீஃதிலும் நேரடியாகப் பாடுபடுகிறவர்களுக்கு அல்லாஹ் 29:69ல் வாக்களித்துள்ளது போல் உதவி செய்வான். நேர்வழியைக் காட்டுவான். 49:14ல் அல்லாஹ் சொல்வது போல் ஈமான் உள்ளத்தில் நுழையாமல், 12:106ல் அல்லாஹ் சொல்வது போல் 7:3, 33:36,66–68 இறைவாக்குகள் படியும் இணைவைக்கும் மிகப் பெரும்பான்மையினர் செல்லும் வழியில், 9:31 இறைவாக்குச் சொல்வது போல் இந்த மவ்லவிகளை தங்களின் வணங்கும் ரப்பாக ஆக்கிக் கொண்டவர்கள் ஒருபோதும் நேர்வழியை அடையமாட்டார்கள்.

இந்த விரலாட்டும் தீய செயல் மாலிக்கி, ஹம்பலி மத்ஹபுகளில் இருப்பதோ, அதன் அடிப்படையில் ஸலஃபி மத்ஹபில் இருப்பதோ, அரபு நாடுகளில் அதிகமானோர் விரலாட்டுகிறார்கள் என்பதோ ஒரு போதும் மார்க்கம் ஆகாது. அவர்களைப் பார்த்து ஏமாறாதீர்கள்; எச்சரிக்கை!

தொழுகை இருப்பில் விரலாட்டுகிறவர்கள் நஸாயி 1148 ஹதீஃதில் இப்னு உமர்(ரழி) சொல்வது போல் ஷைத்தானுடைய செயலைச் செய்து தங்களின் தொழுகையைப் பாழ்படுத்துவதுடன், பக்கத்தில் தொழுபவர்களின் தொழுகைகளையும் பாழ்படுத்துகிறார்கள் என்பதைத் திட்டமாக அறிந்து கொள்ளுங்கள். அதை விட்டும் தௌபா செய்து மீளுங்கள். அதுவே அல்லாஹ்வின் பொருத்தத்தையும் மறுமையில் வெற்றியையும் பெற்றுத் தரும். அல்லாஹ் அருள் புரிவானாக.

தொழுகை இருப்பில் விரலாட்டுவது பற்றி இவ்வளவு விரிவாக, கடுமையாக எழுதி இருப்பதை அரசியல் ஆர்வலர்கள் கடுமையாக விமர்சிக்கலாம். முஸ்லிம் சமுதாயம் எதிரிகளால் கடும் துன்பத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கும் இக்காலக் கட்டத்தில் தொழுகையில் விரலாட்டுவதைச் சர்ச்சையாக்கி சமுதாயத்தைப் பிளவு படுத்தலாமா? எதிரிகள் விரலை அல்ல, கையை அல்ல, கழுத்தையே வெட்ட முற்பட்டிருக்கும் நிலையில் விரலாட்டுவதா பிரச்சனை எனத் தங்கள் ஆதரவாளர்களுக்குக் கொம்பு சீவி விடுவார்கள். ஆனால் இன்று முஸ்லிம்கள் அடைந்து வரும் அனைத்துத் துன்பங்களும், அவமரியாதைகளும் முஸ்லிம்கள் தங்கள் கைகளால் தேடிக் கொண்டவையே என்று அல்குர்ஆன் 2:95, 195, 3:182, 4:62, 8:51, 30:41, 42:30 இறைவாக்குகள் கூறுவது அவர்களுக்குப் படிப்பினையைத் தராது. மாறாக 17:41,45-47,89 இறைவாக்குகள் கூறுவது போல் இந்த இறைவாக்குகள் அவர்களுக்கு வெறுப்பையே அதி கப்படுத்தும்; எட்டிக்காயாகக் கசக்கும்.

அவர்கள் நடுநிலையோடு சிந்திக்க வேண்டும். சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் முஸ்லிம்களின் நிலை இந்த அளவு படுபாதாளத்தில் வீழ்ந்து கிடந்ததா? மார்க்கச் செயல்பாடுகளில் மிக மிகப் பின்னுக்கு முஸ்லிம் சமுதாயம் இருந்தாலும் பிற சமூகங்களால் எள்ளி நகையாடப்படும் நிலையில் இல்லை. நாங்கள் சமுதாய நிலையை உயர்த்தப் போகிறோம், அரசியலில் அதற்குரிய இடத்தைப் பெற்றுதரப் போகிறோம். இட ஒதுக்கீடு பெற்றுத் தரப்போகிறோம் என முழக்கமிட்டுக் கொண்டு 3:186, 7:86, 29:29 இறைவாக்குகளைத் துச்சமாக எண்ணித் தூக்கி எறிந்துவிட்டு, கம்யூனிச, ஜனநாயக சித்தாதங்களை வேதவாக்காகக் கொண்டு சில முஸ்லிம் இயக்கங்கள் செயல்பட்டதின் தீய விளைவையே இன்று முஸ்லிம்கள் அனுபவித்து வருகிறார்கள்.

2:256,257,4:51,60,76, 5:60, 16:36, 39:17 வசனங்கள் தாஃகூத் எனக் குறிப்பிடுவது மதகுருமார்களையே!

பரேல்வி மவ்லவிகள் எப்படி தர்காவில் போய் வேண்டுதல் வைத்ததால் நோய் குணமானது, பிள்ளை கிடைத்தது எனக் கூறி பிள்ளைகளுக்கு மொகிதீன் பிச்சை, நாகூர் பிச்சை, நாகூர் கனி எனப் பெயரிடுகிறார்களோ, அதே போல் இந்த அரசியல் ஆர்ப்பாட்டக்காரர்களும் முஸ்லிம்களுக்குக் கிடைக் கும் அற்பமான சலுகைகளும் தங்கள் முயற்சியால் தான் கிடைத்தது என்று தம்பட்டம் அடித்து, பெருமை பேசி முஸ்லிம்களை ஏமாற்றி உலகியல் ஆதாயம் அடைகிறார்கள்.

உலகியல் வாழ்க்கை வசதிகளைக் கொடுப்பவன் அல்லாஹ்வே என்று கூறும் பல குர்ஆன் வசனங் களும், "அல்லாஹ் கொடுப்பதை எவரும் தடுக்க முடியாது; அல்லாஹ் தடுப்பதை எவரும் கொடுக்க முடியாது" என்று மார்க்கம் தெளிவாகச் சொல்லிக் கொண்டிருக்கும் நிலையில், குர்ஆன், ஹதீஃத் போதனைகளை நிராகரித்து கம்யூனிச, ஜனநாயக மனிதத் தத்துவங்களை கையில் எடுப்பது விவேக மான செயலா? அல்லாஹ் ஏற்கும் செயலா? அல் லாஹ்வின் உதவி கிடைக்குமா? என்பதை இப்படிப் பட்ட அரசியல் இயக்கங்கள் சிந்திக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். தர்காக்களில் அடக்கப்பட் டிருக்கும் இறந்தவர்களிடம் கையேந்துவதற்கும், இதற்கும் பெருத்த வேறுபாடு இல்லை என்பதை யும் இப்படிப்பட்ட இயக்கங்கள் உணர முன்வர வேண்டும்.

முஸ்லிம்கள், குறிப்பாக, இளைஞர்கள் தங்கள் தவறை உணர்ந்து திருந்தி 3:103 இறைவாக்குக் கட்டளையிடுவது போல் ஒரே ஜமாஅத்தாக ஒன்று பட்டு அல்குர்ஆனைப் பற்றிப் பிடிக்காதவரை முஸ் லிம்களுக்கு மீட்சியே இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். இன்று முஸ்லிம்களின் கட்டாயக் கடமையான தொழுகைகளை எத்தனை பேர் விடா மல் கடைபிடிக்கின்றனர். முஸ்லிம்களில் 98 சத விகிதத்தினரிடம் ஐங்கால தொழுகையே இல்லை. சிலர் வார முசல்லிகளாகவும், சிலர் வருட முசல்லி களாகவும் இருப்பர். சிலரின் தலைகள் அல்லாஹ் வுக்காக சுஜூது செய்தே இருக்காது. 2% தொழு பவர்களிலும் நபிவழியில் தொழுபவர்கள் எத்தனை பேர்? மத்ஹபு வழிகளில், தரீக்கா வழிகளில், இயக் கங்கள் வழிகளில் தொழுபவர்கள்தான் அதிகம். விரல் விட்டு எண்ணும் அளவில் வெகுசிலரே நபி வழித் தொழுகையைப் பேணித் தொழுபவர்களாக இருக்கிறார்கள். அவர்களின் தொழுகைகளும் பக் கத்தில் தொழுப வர்களின் ஷைத்தானின் செயலான நீரிலிருந்து வெளியே எடுத்துப் போட்ட மீன்கள் துடிப்பது போல் வேகமாக விரலை ஆட்டும் செய லால் பாழடிக்கப்படுகிறது.

ஐங்காலமும் பேணித் தொழுபவர்களுக்குத்தான் தொழுகையின் அருமை தெரியும். தொழுகையே அற்றவர்களுக்கு,107:4–6 இறைவாக்குகள் கூறுவது போல் மக்களுக்குக் காட்டத் தொழுபவர்களுக்கு, உலகியல் ஆதாயங்களையே குறியாகக் கொண்ட வர்களுக்கு தொழுகையின் ஒவ்வொரு நிலையின் அருமையும் தெரிவதற்கு வாய்ப்பில்லை. வழமை யாக தொழுபவர்களும் இப்படிப்பட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது தங்களின் ஐங் காலத் தொழுகைகளைப் பாழ்படுத்தி விடுகிறார் கள். அப்படிப்பட்டவர்களிடமிருந்து 29:45 இறை வாக்கு கூறுவது போல், மானக்கேடானவையும், தீயவையும் நீங்கும் என எதிர்பார்ப்பது குதிரைக் கொம்பே. அவர்களால் விரலாட்டுவதால் தொழு கையில் ஏற்படும் கெடுதியை எப்படி விளங்க முடியும்?

அவர்கள் இவ்வுலகை விட மறுமையை அதிக மாக நேசிப்பவர்களாக இருந்தால், கட்டாயக் கட மையான ஐங்காலத் தொழுகைகளையும், ஜமாஅத் துடன் விடாதுப் பேணித் தொழ முன்வரட்டும். அப்போது தொழுகையில் ஷைத்தானுடைய செய லான விரலாட்டும் கெடுதியை அவர்களாலும் புரிந்து கொள்ள முடியும். நேர்வழி காட்ட ஏகன் அல்லாஹ்விடம் துஆ செய்கிறோம்.

6:153 இறைவாக்குச் சொல்வது போல் மார்க்கம்–நேர்வழி ஒன்றே ஒன்றுதான். மதகுருமார்கள் என்றும் ஆலிம்கள், அல்லாமாக்கள் என்றும் பெருமை பேசும் இந்த மவ்லவிகள் ஒரே நேர்வழி மார்க்கத்தை எண்ணற்றக் கோணல் வழிகளாக்கி–பல மத்ஹபுகள் என்ற மதங்களாக்கி அவற்றைத் தொழிலாகக் கொண்டு வயிறு வளர்த்து வருகின்ற னர். மார்க்கத்தை ஒருபோதும் பிழைப்பாகக் கொள் ளக்கூடாது. அதுவே சமுதாயம் பிளவுபடவும், ஷிர்க், குஃப்ர், பித்அத்கள் பக்தியுடன் வழிபாடு செய்யப்படவும் காரணமாகிறது. (பார்க்க: 6:90, 10:72, 11:29,51, 25:57, 26:109, 127,145,164,180, 34:47, 36:21, 38:86, 42:23, 2:41, 74,75, 78,79,109,146, 159–162,174, 3:78, 187,188, 4:44,46, 5:13,41,62,63, 6:20,21,25,26, 9:9,10,34, 11:18,19, 31:6, 52:40, 68, 52:40, 68:46)

மார்க்கத்தைப் பிழைப்பாகக் கொண்ட இம் மவ்லவிகள் ஒருபோதும் சத்தியத்தை–நேர்வழியை மக்களுக்குச் சொல்லமாட்டார்கள். தங்களின் வயிற் றுப் பிழைப்பை நோக்கமாகக் கொண்டு ஒரு போதும் நேர்வழியை ஏற்கமாட்டார்கள் என்று எண்ணற்ற குர்ஆன் வசனங்களும், ஆதாரபூர்வ மான ஹதீஃத்களும் சொல்லிக் கொண்டிருக்கும் நிலையில், இம்மவ்லவிகள் சத்தியத்தை ஏற்று நேர்வழிக்கு வருவார்கள் என்று நம்புவதை விட மூட நம்பிக்கை வேறு இருக்குமா? இருக்கவே இருக் காது. இம்மவ்லவிகளின் உடும்புப் பிடியிலிருந்து விடுபட்டு நேரடியாகச் சுய சிந்தனையுடன் குர் ஆனை, ஹதீஃதைப் பற்றிப் பிடித்து அவற்றின் வழி காட்டல்படி நடப்பவர்கள் மட்டுமே நேர்வழி பெற முடியும். அல்லாஹ் அருள் புரிவானாக.

அந்நஜாத்தின் வளர்ச்சி புரோகிதத்தின் வீழ்ச்சி! புரோகிதத்தின் வீழ்ச்சி கலப்படமற்ற தூய இஸ்லாத்தின் எழுச்சி!